OL/2017/82-T-I, II (OLD)

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

පැරණි නිර්දේශය/பழைய பாடத்திட்டம்/Old Syllabus

OLD

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

82 T I, II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2017 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2017 டிசெம்பர்
**General Certificate of Education (Ord. Level) Examination, December 2017**

ධීවර හා ආහාර තාක්ෂණය I, II
கடற்றொழிலும் உணவுத் தொழினுட்பவியலும் I, II
Fisheries and Food Technology I, II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

## கடற்றொழிலும் உணவுத் தொழினுட்பவியலும் I

**கவனிக்க:**
(i) எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
(ii) **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.
(iii) உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.
(iv) அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, பின்பற்றுக.

**1.** கடலில் வாழும் அடித்தளவாழி மீன்களாவன,
(1) சாளையும் கீரிமீனும்
(2) கொஸ்ஸாவும் ரண்ணாவும்
(3) சூரையும் கிளவாலையும்
(4) பறவையும் நெத்தலியும்

**2.** வருடத்தின் குறித்த காலப்பகுதியில் கடலுடன் தொடர்புடையதாகவும் எஞ்சிய காலப்பகுதியில் கடலிலிருந்து வேறாகிக் காணப்படுவதுமான பிரதேசம்,
(1) வில்லு ஆகும். (2) கடனீரேரி ஆகும். (3) ஆற்றுமுகம் ஆகும். (4) குடா ஆகும்.

**3.** இலங்கையில் அறுவடை செய்யப்படும் மொத்த மீன்வளத்தில் அதிகளவில் அடங்கியிருப்பன,
(1) ஆழ்கடல் ருணா வகை மீன்களும் ஏனைய பெரிய கடல் மீன்களும்
(2) ஆழ்கடல் ருணா வகை மீன்களும் அடித்தளவாழி மீன்களும்
(3) கரையோர சிறிய மீன்களும் கணவாய்களும்
(4) கரையோர சிறிய மீன்களும் இறால்களும்

**4.** இலங்கையின் தெற்கு, மேற்கு, தென்மேற்குக் கடற்பிரதேசம் கொந்தளிப்பாகவிருக்கும் காலப்பகுதி,
(1) பெப்ரவரி தொடக்கம் ஏப்ரல் வரையாகும்.
(2) மே தொடக்கம் செப்ரெம்பர் வரையாகும்.
(3) ஒக்ரோபர் தொடக்கம் நவம்பர் வரையாகும்.
(4) டிசெம்பர் தொடக்கம் ஜனவரி வரையாகும்.

**5.** நீரோட்டங்கள் உள்ள பிரதேசங்களில் காணப்படும் மீன்வளம் பற்றி மாணவரொருவர் பின்வரும் கூற்றுக்களைத் தெரிவித்தார்.
A – மேலெழல் (Up - welling) நடைபெறுவதனால் மீன் குடித்தொகை அதிகமாகும்.
B – மீன்களின் குடிபெயர்வுக்கு நீரோட்டங்கள் உதவுவதால் மீன்வளம் அதிகமாகும்.
C – நீரோட்டங்களுடன் உணவுப் பதார்த்தங்கள் அடித்துச் செல்லப்படுவதால் மீன்களின் குடித்தொகை குறைவாகும்.

மேற்படி கூற்றுக்களில் சரியானவை,
(1) A, B ஆகியன மாத்திரம்.
(2) A, C ஆகியன மாத்திரம்.
(3) B, C ஆகியன மாத்திரம்.
(4) A, B, C ஆகியன எல்லாம்

**6.** பின்வருவனவற்றுள் முழுமையாக அமிழ்ந்து வாழும் நீர்த்தாவரம்,
(1) ஜப்பானிய ஜக்கோணியா
(2) சல்வீனியா
(3) தாமரை
(4) வலிசுனேரியா

**7.** இவற்றுள் இலங்கையில் பாதுகாக்கப்பட்ட நீருயிரினம் எது?
(1) ஆமை (2) விலாங்கு (3) லூலா (4) மட்டி



Department of Examinations Sri Lanka


**8.** இலங்கையின் நீருயிரின வளர்ப்பு அபிவிருத்திக்கான வாய்ப்புக்களை நன்கு விளக்கும் கூற்று எது?
(1) நிலப்பிரதேசத்தைப் போன்று எட்டு மடங்கு பாரியளவு கடற்பிரதேசம் காணப்படல்.
(2) ஒரு சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பில் மூன்று ஹெக்ரேயர் நிலையான உண்ணாட்டு நீர்நிலைகள் காணப்படல்.
(3) பிரத்தியேக பொருளாதார வலயக் கடலைச் சுற்றி சர்வதேச கடற்பரப்பு அமைந்திருத்தல்.
(4) இலங்கையில் 103 ஆறுகளும் பல பருவகால நீர்த்தேக்கங்களும் அமைந்திருத்தல்.

**9.** இடுப்புச்செட்டை, குதச்செட்டை, வாற்செட்டை ஆகியன இணைந்து தனிச் செட்டையாக அமைந்துள்ள மீனினம்
(1) சூரை (2) காரல் (3) மகுரா (4) விலாங்கு

**10.** மீன்களில் உறுத்துணர்ச்சிக்கெனப் பயன்படுத்தப்படுவன,
(1) கண், தோல், பக்கக் கோடு ஆகியனவாகும்.
(2) வாய்க்குழி, குதச்செட்டை, செதில் ஆகியனவாகும்.
(3) மார்புச்செட்டை, இடுப்புச்செட்டை, முதுகுப்புறச்செட்டை ஆகியனவாகும்.
(4) முதுகுப்புறச்செட்டை, சளியப்படை, உணர்கொம்பு ஆகியனவாகும்.

**11.** நீர்ச்சூழலுக்கு வெளியே சிறிதளவு நேரம் வாழத்தக்க மீனினங்களாவன,
(1) சுறாவும் திருக்கையும் (2) சூரையும் கிளவாலையும்
(3) காரலும் பாரையும் (4) காவையாவும் மகுராவும்

**12.** உருவில் காட்டப்பட்டுள்ள நீர்வாழ் உயிரினம்,
(1) சிங்கி இறாலாகும்.
(2) பால் இறாலாகும்.
(3) நன்னீர் இறாலாகும்.
(4) கொடுக்கு இறாலாகும்.



**13.** இலங்கையின் சுதேச மீனினங்கள் தற்போது துரிதமாக அழிந்துவரும் அச்சுறுத்தலுக்கு ஆளாகியுள்ளன. இதற்கான பிரதான காரணம்,
(1) அவற்றின் வாழிடங்கள் அழிக்கப்படல்
(2) இந்த மீன்கள் அதிகளவில் ஏற்றுமதி செய்யப்படல்
(3) அவை காலநிலை மாற்றங்களுக்கு உள்ளாதல்
(4) நீர்ப்பசானத் திட்டங்களுக்காக நீரைப் பெற்றுக்கொள்ளல்

**14.** பெரிய மீன்கூட்டங்களை ஒரே தடவையில் பிடிப்பதற்குப் பயன்படுத்தப்படும் பாரம்பரிய மீன்பிடி முறை
(1) ஜா அடைப்பு (2) களக்கம்பு மீன்பிடி (3) கரைவலை (4) கூடை மீன்பிடி

**15.** இலங்கையின் மொத்த மீன் விளைச்சலில் அதிகளவு பிடிக்கப்படுவது,
(1) கரைவலை மூலமாகும். (2) செவுள்வலை மூலமாகும்.
(3) நீள்தூண்டில் மூலமாகும். (4) கூடைவலை மூலமாகும்.

**16.** மரக்குற்றியொன்றைக் குடைந்து தயாரிக்கப்படும் பாரம்பரிய மீன்பிடிக்கலன்,
(1) தெப்பம் (2) கட்டுமரம் (3) பெருந்தெப்பம் (4) வள்ளம்

**17.** இழுத்துச்செல்லப்படும் மீன்பிடிச் சாதனமாக அமைவது,
(1) செவுள் வலை (2) ட்ரோல் வலை (3) முப்புரி வலை (4) கம்பிலி வலை

**18.** செவுள் வலையில் 'சுமை' எனப்படுவது,
(1) மேல்மந்தில் மிதப்புக்களைக் கட்டுப்படுத்தவெனப் பொருத்தப்படும் மிதப்புப் பதார்த்தமாகும்.
(2) மேல் மேற்பரப்பை உறுதியாகப் பேணுவதற்குப் பயன்படுத்தப்படும் கயிறாகும்.
(3) கீழ் மந்தினை நீரில் அமிழ்த்தி வைத்திருக்கப் பயன்படுத்தப்படும் நிறையுடைய பதார்த்தங்களாகும்.
(4) கீழ் மந்தினை உறுதியாகப் பேணுவதற்குப் பயன்படுத்தப்படும் கயிறாகும்.

**19.** பின்வருவனவற்றுள் இயங்காநிலை மீன்பிடிச் சாதனமானது,
(1) கம்பிலி வலை (2) கரைவலை (3) கட்டு வலை (4) ட்ரோல் வலை

**20.** பொழுதுபோக்கிற்கென மீன்பிடிப்பதற்கெனப் பயன்படுத்தப்படும் மீன்பிடிச்சாதனம்,
(1) வீச்சு வலை (2) கைத்தூண்டில் (3) நீள்தூண்டில் (4) செவுள் வலை

[பக். 3 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka
Department of Examinations Sri Lanka

**21.** நீர்நிலைகளில் மீன்களை அறிமுகஞ்செய்வதற்கு மிகப் பொருத்தமான வளர்ச்சிப் பருவமானது,
(1) முட்டை (2) அசித்தன்
(3) விரளலவுப் பருவக் குஞ்சுகள் (4) முதிர்ந்த மீன்கள்

**22.** கருவாடு தயாரிப்பின்போது 10 kg மீன்களுக்கென இடவேண்டிய உப்பின் அளவு,
(1) 1 kg (2) 2 kg (3) 3 kg (4) 4 kg

**23.** இறால் பிடிப்பதற்குப் பயன்படுத்தப்படும் பாரம்பரிய மீன்பிடிச் சாதனம்,
(1) அடியில் இழுக்கப்படும் ட்ரோலிங் (2) முப்புரி வலை
(3) ஜா அடைப்பு (4) இழுவலை


**24.** இலங்கையின் வடகீழ் ஆழ்கடல் பிரதேசத்தில் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடும் பன்னாட் படகொன்று, ஏதேனும் அவசர நிலைமையின் போது வரத்தக்க மிக அண்மித்த மீன்பிடித் துறைமுகம்,
(1) கற்பிட்டி (2) திருகோணமலை (3) வாழைச்சேனை (4) திக்கோவிற்ற

**25.** இனப்பெருக்கச் செயன்முறைக்கென கடனீரேரியிலிருந்து கடலுக்கு இடம்பெயரும் நீருயிரின வகை
(1) கொடுவா (2) கணவாய் (3) இறால் (4) கடல் ஆமை

**26.** சேற்று நண்டுகளைக் கொழுக்கச் செய்வதன் மூலம் அதிக பொருளாதார அனுகூலங்களைப் பெற்றுக்கொள்ளலாம். இதற்கெனப் பயன்படுத்தப்படுவன,
(1) முட்டையிடும் நண்டுகள் (2) முட்டையிட்ட நண்டுகள்
(3) நீர் நண்டுகள் (4) முதிர்ந்த நண்டுகள்

**27.** கீழே தரப்பட்டுள்ளவை நீரின் தரத்தை அளவிடுவதற்கெனப் பயன்படுத்தப்படும் சில உபகரணங்களாகும்.
A – pH மானி
B – றிவ்றக்ரோ மானி (Refracto meter)
C – செச்சித் தட்டு (Secchi disk)
D – ஒட்சிசன் மானி
மேலே தரப்பட்டுள்ள உபகரணங்களில் நீரின் உவர்த்தன்மையை அளவிடப் பயன்படுத்தப்படுவது,
(1) A (2) B (3) C (4) D

**28.** உருவில் *A* மூலமாகக் காட்டப்படும் கடல் எல்லையானது,
(1) கண்டமேடைப் பகுதியாகும்.
(2) சர்வதேசக் கடற்பரப்பாகும்.
(3) பிரத்தியேகப் பொருளாதார வலயமாகும்.
(4) தூரக் கடல் வலயமாகும்.





**29.** பின்வருவனவற்றில் இலங்கையில் அண்மைக் காலத்தில் அமைக்கப்பட்ட நீர்முதல் எது?
(1) பராக்கிரம சமுத்திரம் (2) மின்னேரியாக் குளம்
(3) லுணுகம்வெகர நீர்த்தேக்கம் (4) பசவக்குளம்

**30.** இலங்கையின் நன்னீர்ச் சூழலில் வசிக்கும் சுதேச மீனினமானது
(1) திலாப்பியா (2) காவையா
(3) திரவுற் (4) காப்பையா

**31.** மீன்களுக்கான உணவுக் கலவையில் அதிகளவில் அடங்கியிருக்க வேண்டிய போசணைப் பொருள்,
(1) புரதம் (2) காபோவைதரேற்று
(3) கொழுப்பு (4) விற்றமின்

**32.** இந்த உருவில் '*A*' யினால் குறித்துக் காட்டப்பட்டுள்ள வாற்செட்டையின் வடிவத்தைக் கொண்ட மீனினமானது
(1) லூலா
(2) கொடுவா
(3) சூரை
(4) சுறா






Department of Examinations Sri Lanka

**33.** மீன்வளர்ப்புக்கெனத் தடாகத்தைத் அமைப்பதற்குப் பொருத்தமான இடத்தைத் தெரிவுசெய்யும்போது கவனத்திற்கொள்ள வேண்டிய விடயங்களாக மாணவரொருவரினால் பின்வருவன தெரிவிக்கப்பட்டன.

A – மணல் மண்ணைக் கொண்ட நிலமாக இருத்தல்
B – நிழல் கொண்ட இடமாக இருத்தல்
C – சந்தைக்கு அண்மையில் இருத்தல்

மேலே தரப்பட்ட கூற்றுக்களுள் சரியானது / சரியானவை

(1) A மாத்திரம். (2) B மாத்திரம்.
(3) C மாத்திரம். (4) B, C ஆகியன மாத்திரம்.

**34.** 35ppt அல்லது அதிலும் அதிகமான உவர்த்தன்மையைக் கொண்ட நீர்நிலைகளில் வளரும் நீர்த்தாவரம்

(1) ஐதரில்லா (2) கிரசிலாரியா (3) வலிசுனேரியா (4) கிண்ணை

**35.** சுறாவின் உடல்,

(1) அருவிக்கோட்டு வடிவமானதாகும். (2) இருபக்கமும் தட்டையானதாகும்.
(3) முதுகுவயிற்றுப் புறமாகத் தட்டையானதாகும். (4) பாம்புத்தலை வடிவம் கொண்டதாகும்.

**36.** கீழே தரப்பட்டுள்ளவை படகோட்டலில் பயன்படுத்தப்படும் உபகரணங்கள் சிலவாகும்.

A – திசைகாட்டி (Compass)
B – உலகளாவிய நிலைய சமிக்ஞை முறைமை (GPS)
C – எதிரொலிமானி (Echosounder)

மேற்படி உபகரணங்களில் மீன்பிடிக்கலனின் திசையை அறிய உதவுவன,

(1) A, B ஆகியன மாத்திரம். (2) A, C ஆகியன மாத்திரம்.
(3) B, C ஆகியன மாத்திரம். (4) A, B, C ஆகியன எல்லாம்.

**37.** மீனொன்றை அறுவடைசெய்த பின்னர் தற்சமிபாட்டுச் செயன்முறை நிகழ்வது,

(1) பங்கசுக்கள் மூலமாகும். (2) பற்றீரியாக்கள் மூலமாகும்.
(3) வைரசுக்கள் மூலமாகும். (4) நொதியங்கள் மூலமாகும்.

**38.** சூழற்றொகுதியின் ஒரு போசணை மட்டத்திலிருந்து அதற்கு மேலேயுள்ள போசணை மட்டத்துக்குப் பாயும் சக்தியின் அளவு,

(1) 5% (2) 10% (3) 50% (4) 90%

**39.** ஆற்றுக்கு அண்மையில் அமைந்துள்ளதும் பருவகாலத்தின் போது நீரில் மூழ்குவதுமான பிரதேசம் எப்பெயரினால் அழைக்கப்படும்?

(1) ஆற்றுமுகமாகும். (2) உவர் சேற்றுநிலமாகும்.
(3) வில்லு ஆகும். (4) கடனீரேரி ஆகும்.

**40.** நச்சுத்தன்மை கொண்ட நீருயிரினங்களாவன,

(1) கற்லாவும் நீர்க்காகமும் (2) வலிகோவ்வாவும் கடலட்டையும்
(3) காவையாவும் விலாங்கும் (4) பெத்தயாவும் கடல் விலாங்கும்

* *



Department of Examinations Sri Lanka
Department of Examinations Sri Lanka

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

පැරණි නිර්දේශය/பழைய பாடத்திட்டம்/Old Syllabus

OLD

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

| 82 | T | I, II |
|---|---|---|

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2017 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2017 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2017

ධීවර හා ආහාර තාක්ෂණය I, II
கடற்றொழிலும் உணவுத் தொழினுட்பவியலும் I, II
Fisheries and Food Technology I, II

## கடற்றொழிலும் உணவுத் தொழினுட்பவியலும் II

※ **முதலாம்** வினாவையும் வேறு எவையேனும் **நான்கு** வினாக்களையும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு **மட்டும்** விடை எழுதுக.

**1.** நீர்ச்சூழற்றொகுதிகளின் நீடித்த நிலைபேறுக்கும் மீன்களில் ஏற்படும் இழப்புக்களைக் குறைக்கவும் ஏற்ற வகையில் மீன் வளங்கள் அறுவடை செய்யப்பட வேண்டும். மேலும், அறுவடைக்குப் பிந்திய இழப்புகள் குறைவடையத்தக்கதாக மீன் விளைச்சல் கையாளப்பட வேண்டியதும் முக்கியமாகும்.

(i) மீன்களை அறுவடைசெய்யப் பயன்படுத்தப்படும் சூழலுக்கு உவப்பான மீன்பிடிச் சாதனங்கள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(ii) சூழலுக்குப் பாதிப்பினை ஏற்படுத்தக்கூடிய மீன்பிடிச் சாதனமொன்றைப் பெயரிடுக.

(iii) மீன்பிடிக்கலனின் களஞ்சியத்தில் காணப்பட வேண்டிய தன்மைகள் **இரண்டை** எழுதுக.

(iv) மீன்களை மீன்பிடிக்கலனிலிருந்து இறக்கும்போது கைக்கொள்ளப்பட வேண்டிய சரியான நடைமுறைகள் **இரண்டைத்** தருக.

(v) மீன் விளைச்சலில் இழப்பு ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்கள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(vi) தரமான மீன் விளைச்சலின் இயல்புகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(vii) மீன் விளைச்சலைச் சந்தைப்படுத்தும் அரச நிறுவனமொன்றைப் பெயரிடுக.

(viii) மீன் நற்காப்புக்கெனப் பயன்படுத்தப்படும் கோட்பாடு **ஒன்றைக்** குறிப்பிடுக.

(ix) மரபுரீதியான மீன் நற்காப்பு முறைகள் **இரண்டைப்** பெயரிடுக.

(x) நீர்ச் சூழற்றொகுதிகளின் நிலைபேற்றுக்கென நடைமுறைப்படுத்தப்படும் முகாமைத்துவ முறையொன்றைக் குறிப்பிடுக.

**2.** தற்போது உணவுக்கான நீருயிரின வளர்ப்பை மேற்கொள்வதற்கு, இலங்கை மக்கள் அதிக முனைப்புக் காட்டுகின்றனர்.

(i) உணவுக்கான நீருயிரின வளர்ப்புக்காகத் தெரிவுசெய்யப்படும் மீன்களில் காணப்பட வேண்டிய **நான்கு** இயல்புகளைக் குறிப்பிடுக.

(ii) முகாமைத்துவ முறைக்கமைய நீருயிரின வளர்ப்பு முறைகள் **மூன்றைக்** குறிப்பிட்டு, அவற்றைச் சுருக்கமாக விவரிக்குக.

(iii) மீன்வளர்ப்புத் தடாகத்தில் மீன்களை அறிமுகஞ் செய்யும் விதத்தை விவரிக்குக.

**3.** இலங்கையில் அலங்கார மீன்வளர்ப்பை மேம்படுத்துவதற்கு அதிக வாய்ப்பு உள்ளது.

(i) அலங்கார மீன்களை வளர்ப்பதன் பயன்கள் **நான்கைக்** குறிப்பிடுக.

(ii) (a) அலங்கார மீன்வளர்ப்புக் கட்டமைப்பில் உள்ள நீரில் கட்டுப்படுத்தப்பட வேண்டிய நிலைமைகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(b) இந்த நிலைமைகளைக் கட்டுப்படுத்துவதற்குக் கைக்கொள்ளத்தக்க நடைமுறை ஒவ்வொன்றைக் குறிப்பிடுக.

(iii) இலங்கையில் அலங்கார மீன்வளர்ப்புக் கைத்தொழிலை மேம்படுத்துவதற்கு மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் **இரண்டை** விவரிக்குக.

[பக். 6 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka

**4.** நீருயிரினவளக் கைத்தொழிலில் மீன் விளைச்சலைப் பழுதடையாது பேணுவதன் மூலமாக அதிக அனுகூலங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

(i) மீன்கள் பழுதடைய ஏதுவாக அமையும் விடயங்கள் **மூன்றைக்** குறிப்பிடுக.

(ii) மீன் விளைச்சல் பழுதடைவதனால் ஏற்படும் பிரதிகூலங்கள் **நான்கை** எழுதுக.

(iii) மீன் நுகர்வை அதிகரிப்பதற்கென மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் **மூன்றை** விவரிக்குக.

**5.** இலங்கையில் உவர்நீர், சவர்நீர், நன்னீர் நீர்நிலைகள் சார்ந்ததாக மீன்பிடிக் கைத்தொழில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் உவர்நீர் சார்ந்த மீன்பிடி அதில் பிரதான இடம் வகிக்கின்றது.

(i) கடல் வலயங்கள் சிலவற்றில் மீன் வளங்கள் அதிகரிப்பதற்கான காரணங்கள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(ii) மீன்பிடிக் கைத்தொழிலை அபிவிருத்திசெய்வதற்கு அரசினால் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் **இரண்டை** எழுதுக.

(iii) மீன்பிடிக் கைத்தொழில் இலங்கைப் பொருளாதாரத்துக்கு முக்கியமாக அமையும் விதத்தை விவரிக்குக.

**6.** மீன் விளைச்சலை நற்காப்புச் செய்யும் ஒரு முறையாக தகரத்திலடைத்தல் பயன்படுத்தப்படுகிறது.

(i) தகரத்திலடைக்கப்பட்ட மீன் உற்பத்திக்கென அதிகளவில் பயன்படுத்தப்படும் மீனினங்கள் **மூன்றைப்** பெயரிடுக.

(ii) (a) மீன்களைத் தகரத்திலடைப்பதனால் கிடைக்கும் அனுகூலங்கள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(b) மீன்களைத் தகரத்திலடைக்கும் போது ஊடகமாகப் பயன்படுத்தப்படும் பதார்த்தங்கள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(iii) மீன்களைத் தகரத்திலடைக்கும் போது பயன்படுத்தப்படும் நற்காப்புக் கோட்பாடுகளைச் சுருக்கமாக விவரிக்குக.

**7.** மீன்பிடிச் சமூகத்தினர் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு முக்கிய பங்களிப்பை வழங்குகின்றனர்.

(i) மீன்பிடிச் சமூகத்தவர் கொண்டுள்ள பலங்கள் **மூன்றைக்** குறிப்பிடுக.

(ii) மீன்பிடிச் சமூகத்தவர் எதிர்நோக்கும் சவால்கள் **நான்கைச்** சுருக்கமாக விளக்குக.

(iii) மீன்பிடிச் சமூகத்தவரின் மேம்பாட்டுக்காக அரசினால் மேற்கொள்ளப்பட்டுள்ள **இரண்டு** நடவடிக்கைகளை விவரிக்குக.

* * *

Department of Examinations Sri Lanka
Department of Examinations Sri Lanka